International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 05 Issue: 01 January to March 2023 www.irjtsjournal.org

# தண்டலையார் சதகம் உணர்த்தும் தனிமனித அறக்கூறுகள்

**மு.வடிவேல்**, *முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,*
*பாரதியார் பல்கலைக்கழகம் முதுகலைப் பட்ட மேற்படிப்பு விரிவாக்க மற்றும் ஆராய்ச்சி மையம்,*
*பெருந்துறை, தமிழ்நாடு, இந்தியா - 638052.*

**முனைவர் இரா.மல்லிகா**, *உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*பாரதியார் பல்கலைக்கழகம் முதுகலைப் பட்ட மேற்படிப்பு விரிவாக்க மற்றும் ஆராய்ச்சி மையம்,*
*பெருந்துறை, தமிழ்நாடு, இந்தியா - 638 052.*

*ஆய்வுச்சுருக்கம்*

*இலக்கியம் என்பது மக்களின் வாழ்கையிலிருந்து பிறந்து, அதனை தெளிவுப்படுத்தி மீண்டும் அம்மக்களின் வாழ்க்கையைச் செம்மையுறச் செய்வதாக அமையப்பெறுகிறது. அவ்வகையில் தண்டலையார் சதகத்தில் காணலாகும் தனிமனித அறக்கூறுகள் வாழ்வினை செம்மைப்படுத்துகின்றன. தனிமனித வாழ்வில் கல்வியின் பங்களிப்பென்று பார்க்கும்போது ஒரு மனிதனுக்கு அழகினையும் புகழினையும் தேடித்தருவதாக அமைகிறது. அறிவுடைய மாண்புள்ளவர்களாகத் திகழ கல்வி வழிவகைச் செய்கிறது. இக்கல்வியறிவின் வாயிலாக மற்ற பிற உயிர்களுக்கு கொடுந்துன்பங்களை ஏற்படுத்தாமல் வாழ்வதே நலம் பயக்கும். பிற உயிர்களுக்கு துன்பம் கொடுக்கும் பாவச்செயல்களைச் செய்தால் பிற்காலத்தில் நம்மையே வந்துச்சேரும் என்ற அடிப்படைத் தத்துவத்தை இக்கல்வி உணர்த்துகிறது. ஒருவர் மற்றொருவர் மீது காட்டும் அன்பும் அக்கறையும் வாழ்வில் புரிதலை ஏற்படுத்தக்கூடியது. இன்னாருக்கு இன்னன்ன செய்யவேண்டும் என்ற மனப்பக்குவத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். பொறுமை என்ற பேராயுதமே மனித வாழ்வினை தக்க இடங்களில் நிலைநிறுத்தும். பொறுமை குணத்தால் ஒரு மனிதன் பிறருக்குச் செய்யக்கூடிய செயலும் உதவியும் எவ்வகையாயினும் அறம் என்ற சொல்லால் சிறந்த பண்பு நிறைந்த சான்றோன் என அழைக்கப்படுகின்றான். மேலும் பொறுமை குணத்தால் எவ்வித எதிர்ப்பையும், தீயவர்களின் செயல்களையும் எதிர்த்து வெற்றி பெறுமுடியும். பொறுமை குணம் உள்ள மனிதனே அரசாள முடியும். தீமை தரக்கூடிய வழிகளான துன்பம் செய்தல், பொய் பேசுதல் போன்ற வழியில் பயணித்தல் சிறப்பாகாது. அனைவருக்கும் நன்மையை மட்டுமே செய்து அறத்தைப் போற்றிக் காத்தல் வேண்டும் என்ற தனிமனித அறக்கூறுகளை தண்டலையார் சதகம் எடுத்து செப்புவது வியப்புடையதாக அமைகிறது.*

*குறிப்புச்சொற்கள் : கல்வி, பொறுமை குணம், அறம், சான்றோன்*

**முன்னுரை**

ஆறறிவு கொண்ட மனித இனத்தின் ஒழுக்க நெறியே அறமாக திகழ்கிறது. இவ்வகை அறம் மனிதர்களின் நற்செயல்களின் வாயிலாக வெளிப்படுகிறது. செயல் என்பது எண்ணத்தின் பிரதிபலிப்பாகும். ஆகையால், தூய்மையான எண்ணம் கொண்டவனுடைய செயல்களே அறம்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2023, IRJTSR 

சார்ந்த நற்செயல்களாகப் போற்றப்படும். நல்ல எண்ணங்களையும் செயல்களையும் சொல்லிக்கொடுத்து வளர்ப்பது பெற்றோர்களின் கடமையாகும். இருப்பினும் இலக்கியங்களின் வாயிலாக தம் வாழ்வினை வளப்படுத்திக் கொண்ட மானுடம் பிற்காலத் தலைமுறையினருக்கு வழிகாட்டியாய் அமைகின்றனர். அவ்வகையில் தண்டலையார் சதகம் வழி அறியலாகும் தனிமனித அறக்கூறுகளை எடுத்துரைப்பதாக இவ்வாய்வு அமைகிறது.

கல்வி வழி அறம்

அழகு பொருந்திய காதில் அணியக்கூடிய தோட்டினை காதில் அணிந்தால் அது முகத்திற்கு நல்ல அழகைக் கொடுத்து மேலும், அழகாக்கும். அதுபோல புகழுக்கு மேலான கல்வியைக் கற்று தேர்ந்தால், கற்றவர்கள் நிறைந்திருக்கும் அவையில் முன் நின்றால் அந்த அவைக்கு அழகினைச் சேர்ப்பது போலாகும். இதனை,

*“ஓதறிய வித்தைவந்தால் உரியசபைக்*

*கழகாகும் உலகில் யார்க்கும்*

*ஈதலுடன் அறிவுவந்தால் இனியகுணங்*

*களுக்கழகாய் இருக்கும் அன்றோ“* *(தண்.சத.பா.39)*

என்ற பாடலடிகளின் வாயிலாக, உலகில் வாழும் எவருக்கும் கொடை கொடுக்கும் உள்ளத்தோடு அறிவு கூடியிருந்தால் மற்ற இனிய பண்புகளுக்கு அழகைத் தரும் என்பதை அறியமுடிகிறது. கல்வி கற்பது பிறருக்கு நன்மை செய்யவும், கற்ற கல்வியின் வழி பொருள் ஈட்டி இயலாதவர்களுக்குக் கொடுத்துதவ கல்வி அடிப்படையாக அமைகிறது. அறப்பளீசுர சதகத்திலும்,

*“வளைகடல் திரிந்துபொருள் தேடவேண்டும் தேடி*

*வளரறஞ் செய்ய வேண்டும்“* *(அறப்.சத.பா.13)*

கல்வியின் வழி அறம் செய்யவேண்டும் என்ற கருத்தாக்கம் வெளிப்படுகிறது. அறிவு நூல்களை அனைத்தும் கற்றுத் தெரிந்து கொள்வது நலம் தருவதாகும். மேலும் கல்வி அறத்தின் வழி,

நாடியையும், உடலின் தன்மையையும் உணர்ந்து தன்வந்திரி, சித்தர், கொங்கணர் ஆகியோர் எழுதிய மருத்துவ நூல்களைக் கற்று, இயலாதவர்களுக்கு அறம் செய்யலாமென,

*“குணவா கடம்*

*சோதித்து, மூலிகா விதநிகண் டுங்கண்டு*

*தூயதை லம்லேகி யம்…“* *(அறப்.சத.பா.51)*

அறப்பளீசுர சதகம் தனித்து கூறுகிறது. ஆனால், வாழ்க்கைக்கு ஆகாததும், அறத்துக்கு முரணான உள்ள செய்திகளைக் கற்று பழிச்செயல்களைச் செய்வது தவறினை விட கொடியதாகும்.

இல்லறத்தின் மாண்பு

இல்லறத்தின் தலையாய கடமைகளில் ஒன்றாகிய விருந்தோம்பல் தண்டலையார் சதகத்தில் இடம்பெறுகிறது. இல்வாழ்க்கை நடத்துவோர் நல்லோர் ஆவர். விருந்தினர் இல்லாமல் உண்ட பகல், பகலாகாது என்றும், சுற்றத்தினராய் வந்த விருந்தினருக்கு மரியாதை செய்து அனுப்பியும், மீண்டும் விருந்தினர் வருவார்களா என்று எதிர்ப்பார்த்து உண்பர். இதனை,

*"இல்வாழ்க்கை செலுத்தும் நல்லோர்*

*ஒருவிருந்தா யினுமின்றி உண்டபகல்*

*பகலாமோ? உறவாய் வந்த...."  (தண்.சத.பா.09)*

என்ற பாடலடிகளின் வழி தனிமனித அற ஒழுக்கநெறி வெளிப்படுகிறது. விருந்தில்லாச் சோறு மருந்து என்ற பழமொழி வெளிப்படுகிறது. மனிதனல்லாத பிற உயிரினங்களுக்கும் உணவு அளித்துவிட்டு உண்ணும் வழக்கம் மக்களிடையே காணப்படுகிறது. இதற்கு சங்க இலக்கியங்களும் சான்றாக அமையும். மேலும்,

*"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்*

*நல்விருந்து வானத் தவர்க்கு"  (திருக்.86)*

என்ற திருக்குறளின் வாயிலாகவும் அறக்கூறினை அறியமுடிகிறது. மேலும், நல்வழி என்ற நூலிலும்,

*"மரம் பழுத்தால் வவ்வாலை வாவென்று கூவி*

*இரந்தழைப்பார் யாவருமங் கில்லை - சுரந்தமுதம்*

*கற்றா தரல்போல் கரவாது அளிப்பரேல்*

*உற்றார் உலகத் தவர்"  (நல்வழி.29)*

என்ற பாடலின் வழி உள்ளதை மறைக்காமல் மற்றவருக்குக் கொடுத்து உதவும் ஈகை என்ற குணம் கொண்டவரே சிறந்த அறவழி பேணுவோர் என்று ஔவையார் எடுத்தியம்புவதை அறியமுடிகிறது.

மழை பெய்யும் காலத்தில் ஒருவருக்கு பத்துக்குடம் நீரைக் கொடுத்து உதவுவதை விட, கோடைக்காலத்தில் ஒரு குடம் தண்ணீர் கொடுத்து உதவுவது சிறந்த கொடையாகும். ஒரு மனிதனுக்கு ஏழ்மையும் பஞ்சமும் உருவெடுத்த காலத்தில் எவ்வளவு குறைவாக கொடுத்து உதவினாலும் அதுவே கொடையின் பெரும் பயனாய் அமையுமென்பதை,

*"நேரிடும்பஞ் சந்தனிலே எவ்வளவா கிலும்*

*கொடுத்தால் நீதி யாகும்"  (தண்.சத.பா.48)*

தண்டலையார் சதகப் பாடலடி உணர்த்துகிறது.

அறம் செய்தலே சிறப்பு

வாழும் காலத்தில் எவருக்கும் எந்த நன்மையும் செய்யாது, வாழ்நாள் முடியும் காலத்தில் எமத்தூதன் தம்மை வந்து அழைத்து செல்லும்போது சங்கரா என்று அழைத்தால் நன்மை விளையாது என்பதை,

*"போங்காலம் வருமுன்னே புண்ணியம்செய்*

*தரியகதி பொருந்து றாமல்.......*

*சாங்காலம் சங்கரா! சங்கரா!*

*எனின் வருமோ தருமந்தானே"  (தண்.சத.பா.51)*

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியமுடிகின்றன. ஆகையால், வாழ்கின்ற காலத்தில் அறம் செய்து வாழவேண்டும். அவ்வாறு அறம் செய்யாமல் இறக்கும் தருவாயில் சங்கரா என்று சிவனை அழைத்தால் நன்மை விளையாது என்ற கருத்தமைந்த வரிகள் இன்றும் உலக வழக்கில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**உதவி செய்தல் நன்று**

வானத்தில் பறந்து திரியும் பறவைகள் உண்டு துப்பிய சிறிய எச்சில் விதைகள் எல்லாம் உலகெங்கும் உள்ள காடுகளில் பெரிய மரமாக வளர்ந்து காணப்படுகின்றன. அதுபோல, வாழ்வில் தினை அளவு செய்த நன்றி காலத்தால் ஏற்கும் போது பனை அளவாக கருதப்படும். இதனை தண்டலையார் சதகமானது,

*"துப்பிட்ட ஆலம்பழத்தை சிறிதெனினும்*

*பெரிதாகும் தோற்றம் போலச்*

*செப்பிட்ட தினையளவு செய்த நன்றி*

*பனையளவாய்ச் சிறந்து தோன்றும்" (தண்.சத.பா.12)*

இப்பாடல் வரிகளின் வழி வெளிப்படுத்துகிறது. உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்ற பழமொழியை உணர்த்துகிறது. தன்னை பேணிக் காப்பவரை உயிர் உள்ளவரை மறத்தல் கூடாது. இதனை வள்ளுவரும்,

*"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது*

*அன்றே மறப்பது நன்று" (திருக்.108)*

நன்றி என்பதும் மூலம் வெளிப்படுத்தி, மேலும்

*"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்*

*கொள்வர் பயன்தெரி வார்" (திருக்.104)*

என்ற குறட்பாவின் வழி அறியமுடியகிறது.

**தனிமனித ஒழுக்கம்**

காட்டில் வாழும் கவரிமானானது தன் உடலிலிருந்து ஒரு முடி உதிர்ந்தாலும்கூட தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் அளவிற்கு உயரியது. அதுபோல வாழ்வில் மானத்தோடு வாழ்பவனே சிறந்தவனாவான் என்பதை,

*"கானமரும் கவரியொரு மயிர்படினும்*

*இறக்கும்!.....*

*மானமுடன் வாழ்பவனே மாபுருடன்" (தண்.சத.பா.90)*

என தண்டலையார் சதகம் உணர்த்துகிறது. அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது என்ற பழமொழியை என்ற நினைவுப்படுத்துகிறது. வாழ்வின் அச்சம் உணர்ந்தவர்கள் தீயசெயல்களையும், தன் நற்குணத்திற்கு இழுக்கு நேரிடும் செயல்களையும் செய்யமாட்டார்கள். அச்செயலால் மானத்தை இழக்க நேரிடும் என்று எண்ணுவர்.

**அறிவுடைய தனிமனித செயல்கள்**

போர்க்களத்தில் வெற்றிப் பெற்றுச் சிறந்த வீரர்களுக்குள் சிறந்த வீரர் இவர் என்னும் பெருமையை அடைந்தவரும், நீதியோடு நடக்கின்ற உலகத்தில் நீதியோடு வாழ்வதே அறமாகும். எனவே, அனைவரும் செல்கின்ற நல்வழியிலே தானும் செல்வதே அறிவுடைய தனிமனிதனின் செயலென,

*"உலகத்தோ டொன்றுபட்டு*

*நடப்பதுவே நீதி ஆகும்!*

*ஊரோட உடனோட நாடோட*

*நடுவோடல் உணர்வு தானே"* (தண்.சத.பா.82)

உணர்த்துகிறது. இப்பாடலடிகள் ஊருடன் கூடி வாழ், ஊரோடு உடன் ஓடு என்ற பழமொழிகளை வெளிப்படுத்துகின்றன. பல மனிதர்களின் தொகுப்பு சமூகமாகும். ஒருவன் சமூகத்தில் இருந்து விலகி வாழ முடியாது. இக்காலத்தில் ஊரோடு ஒத்து வாழ் என்ற பழமொழியும் வழக்கத்தில் உள்ளது.

கொலை, திருட்டு, கள்குடித்தல், காமம், குருவை நிந்தித்தல் போன்ற தீயகுணங்களை உடைய அறிவற்றவர்களுக்கு, அறிவுடைய தனிமனிதன் நற்கருத்துக்களைக் கூற நினைக்கமாட்டான். அறிவில்லாதவர்களுக்கு நற்கருத்தைக் கூறச் சென்றால் அறிவுடையவர்களையும் இவ்வுலகம் அறிவில்லாதவரென்று கூறும் என நினைத்து அறிவுடையவர்கள் அச்செயலினைச் செய்ய மாட்டார்கள் என்பதனை,

*"கொலைகளவு கள்ளே காமம்*

*சாலவரும் குருநிந்தை செய்பவர்பால்*

*மேவிஅறந் தனைச்செய் தற்கும்*

*சீலமுடை யோர்நினையார்"* (தண்.சத.பா.87)

என்ற பாடல்வரியின் வழி அறியலாம். இதன்வழி, பனையடியிலிருந்து பாலைக் குடித்தாலும் கள் குடித்தானென்பர் என்ற பழமொழியை உணரமுடிகிறது. பனைமரத்தின் கீழே ஒருவன் அமர்ந்து பாலைக் குடித்தாலும் பார்ப்பவர்கள் கள் குடிப்பதாகத்தான் நினைப்பார்கள். அவர் அமர்ந்திருக்கும் அப்படிப்பட்டது. தவறானவர்களிடம் சேர்வதை அறிவுடையவர்கள் விலக்கிக்கொள்வர் இல்லையெனில் பழிவந்து சேரும் என்ற கருத்தைப் புலப்படுத்துகிறது.

முடிவுரை

தண்டலையார் சதகத்தில் கூறப்பட்டுள்ள தனிமனித அறக்கூறுகள் மனித வாழ்வினை மேலும் செழுமைப்படுத்துகின்றன. கல்வி வழி அறம், பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை, வீட்டிற்கு வரும் உறவினர்களுக்கும் உறவினரல்லாதவர்களுக்கும் விருந்தளிக்கும் பண்பு போன்றவை தனிமனித நற்குணங்களாக வெளிப்படுகின்றன. ஒரு மனிதன் அறப்பண்புகளை எப்போதும் இன்முகத்துடன் வெளிப்படுத்தவேண்டும். உயர்ந்த நெறியில் இவ்வையத்துள் வாழ் வாங்கு வாழ வழிகாட்டும் அறநெறிகளைத் தண்டலையார் சதகம் உணர்த்துகிறது. இச்சதகத்தின் வழி கூறப்படும் அறக்கூறுகள் எக்காலத்திற்கும் பொருந்தி நிற்கும் என்பதை உணரமுடிகிறது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*
© 2023, IRJTSR

**உசாத்துணை நூல்கள்**

[1] கதிர் முருகு.டாக்டர் (2016), படிக்காசுப் புலவரின் பழமொழி விளக்கம் என்னும் தண்டலையார் சதகம் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை - 14 தமிழ்நாடு, இந்தியா.

[2] கதிர் முருகு.டாக்டர் (2013), அம்பலவாணக் கவிராயரின் அறப்பளீசுர சதகம் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை - 14, தமிழ்நாடு, இந்தியா.

[3] வளன் அரசு.பா, திருக்குறள் விளக்கம், சூர்யா பதிப்பகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா - 627001

[4] நல்வழி